


அதிர்ஷ்ட தேவதையும் அறிவு தேவதையும் ஒருநாள் தங்களுக்குள் யார் பெரியவர்கள் என்று வாக்குவாதம் பண்ணி கொண்டு இருந்தார்கள். **அவர்கள் இரண்டு பேரும் அவர்கள் இருவரில் யார் சக்தி வாய்ந்தவர்கள் என்பதை தெரிந்துகொள்ள பூமிக்கு சென்று ஒரு ஏழை விவசாயி மீது சோதனை நடத்தினர்.**
அந்த விவசாயி வாழ்ந்து வந்தது ஒரு சின்ன கிராமத்தில். முதலில் அதிர்ஷ்ட தேவதை தன்னுடைய திறமையை காட்ட ஆரம்பித்து விட்டார்கள். **“அவர்கள் விவசாயி கொண்டிருந்த மொத்த கோதுமை நிலத்தையும் முத்துக்கள் விளையும் நிலமாக மாற்றினார்கள்”.**
அடுத்த நாள் நடந்த அந்த அதிசயத்தை பார்த்து அந்த விவசாயி ரொம்பவே ஆச்சரியப்பட்டார். **“நான் இந்த மாதிரி ஒரு விஷயத்தை இதுக்கு முன்னாடி பார்த்ததே இல்லை”** என்றார் அவர்.



அதே நேரத்தில் அந்த வழியாக வந்து கொண்டிருந்த மகாராஜா, முத்துக்கள் விளையும் அந்த நிலத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். உடனே மகாராஜா, விவசாயிடம், "**ஓ. விவசாயி இந்த மொத்த முத்துக்களை எடுத்துக் கொண்டு என்னுடைய கோட்டைக்கு வா, நான் உனக்கு நிறைய காசு தருகிறேன். அது மட்டுமல்ல என்னுடைய மகளையும் உனக்கு திருமணம் செய்து வைக்கிறேன்**" என்றார். அதற்கு அந்த விவசாயி சொன்னார், "**மகாராஜா இந்த மாதிரி வாய்ப்பு கிடைக்க நான் மிகவும் அதிஷ்டப்பட்டிருக்கிறேன்".** இளவரசியை திருமணம் செய்த பிறகு முதல் நாள் ராத்திரி அந்த இளவரசி விவசாயி அருகில் வந்து உட்கார்ந்து இருந்தார். அப்போது திடீரென்று அந்த விவசாயிக்கு, "**ஒரு அரக்கி ஒருவரின் அருகிலிருந்து கொண்டு அவரை விழுங்கிய கதை ஞாபகம் வந்தது".**

அந்த இளவரசியையும் அரக்கி என்று நினைத்துக்கொண்டு அந்த விவசாயி கோட்டையை விட்டு அடித்து பிடித்து ஓடி கொண்டான். இதைக் கேள்விப்பட்ட மகாராஜா ரொம்பவே கோபப்பட்டார். அவர் உடனே தன் காவலாளிகளிடம் **“அந்த விவசாயி எங்கே இருந்தாலும் பிடித்துக்கொண்டு வந்து தூக்கிலிடுங்கள்”** என்றார்.



அப்போது அறிவு தேவதை அதிர்ஷ்ட தேவதையிடம், **“நீ என்ன செய்து வைத்திருக்கிறாய் பார்”** என்றது. அந்த விவசாயியை தூக்கிலிட சென்ற போது திடீரென்று விவசாயின் உடம்பில், அறிவு தேவதையின் புத்திசாலித்தனம் புகுந்தது. அந்த விவசாயிக்கு திடீரெண்டு தான் எந்த நிலையில் இருக்கிறோம் என்று புரிந்தது. அவன் உடனே**,” இங்கே பாருங்க மகாராஜா.. எதுக்காக இப்போ என்ன தூக்கிலிட போறீங்க?”** என்று கேட்டான்.

காரணம் தெரிந்த பிறகு தான் செய்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம், அதிலிருந்து எப்படி தப்பிக்க வேண்டும் என்று அவன் யோசித்தான். அப்போது அவன்

சொன்னான், “**நேத்து ராத்திரி நதியில் யாரோ மூழ்கும் நிலையில் காப்பாற்றுங்கள் என்று கத்திய சத்தம் கேட்டது. திருமணத்தன்று யாராவது இறந்தால், அது அபசகுணம் என்று கூறுவார்கள் எனவே தான் நான் அவரை காப்பாற்ற ஓடி சென்றேன்**” என்றான் அந்த விவசாயி.
அதைக் கேட்ட மகாராஜா மிகவும் சந்தோஷத்துடன் அந்த விவசாயியை மன்னித்து விட்டார். அது மட்டும் அல்ல “**அதிர்ஷ்டத்தை விட அறிவும் புத்திசாலித்தனமும் தான் சிறந்தது**” என்று அந்த தேவதைகள் முடிவு செய்தனர்.
அந்த விவசாயியும் இளவரசியும் அதன் பிறகு சந்தோஷமாக வாழ ஆரம்பித்தனர்.

நீதி : **புத்திசாலித்தனமே செல்வத்துக்கு பாதுகாப்பு. அதிர்ஷ்டத்தை விட புத்திசாலித்தனமே சிறந்தது.**

TamilBoo